# February 10, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லாவை நீக்க எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்துள்ளன.

(i) சபாநாயகரை நீக்கக் கோருவதற்கு எதிர்க்கட்சிகள் பல காரணங்களை மேற்கோள் காட்டியுள்ளன:

- ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியை பேச அனுமதிக்க மறுப்பது.
- முன்னாள் ராணுவத் தளபதி ஜெனரல் எம்.எம். நாரவனே எழுதிய புத்தகம் தொடர்பான விவாதங்களைத் தடுத்தல்.
- சபையில் இருந்து எட்டு எதிர்க்கட்சி எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.
- காங்கிரஸ் பெண் எம்.பி.க்கள் குறித்து விமர்சனக் கருத்துக்களைத் தெரிவித்த பாஜக எம்.பி. மீது நடவடிக்கை எடுக்கத் தவறியது.

(ii) சபாநாயகரை நீக்குவதற்கான நடைமுறையை இந்திய அரசியலமைப்பின் 94-வது பிரிவின் கீழ் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது.

(iii) பிப்ரவரி 9 ஆம் தேதி வரை, பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட எம்.பி.க்கள் ஏற்கனவே தீர்மானத்தில் கையெழுத்திட்டுள்ளனர், மேலும் கையொப்ப சேகரிப்பு நடந்து வருகிறது.

(iv) தாக்கல் செய்யப்பட்டால், மக்களவை வரலாற்றில் சபாநாயகரை நீக்குவதற்கான தீர்மானம் அறிமுகப்படுத்தப்படுவது இது நான்காவது முறையாகும். ஜி.வி. குமாருக்கு எதிராக முந்தைய தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. மாவ்லங்கர், ஹுகாம் சிங் மற்றும் பால்ராம் ஜாக்கர் ஆகியோரால் பதவி நீக்கம் செய்யப்பட்டனர், ஆனால் எவராலும் பதவியில் இருந்தவரை நீக்க முடியவில்லை.

2.ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணத்தை அடுத்த நெமிலி வட்டம், பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டையில், ரூ.9,000 கோடி மதிப்பீட்டில் 570 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் ஜாகுவார் லேண்ட்ரோவர் (ஜெஎல்ஆர்) கார் உற்பத்தி தொழிற்சாலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

டாடா குழுமத் தலைவர் - என்.சந்திரசேகரன்

3.லட்சத்தீவில் கண்டறியப்பட்ட புதிய வகை லட்சத்தீவில் கண்டறியப்பட்ட புதிய வகை நண்டு. நண்டுக்கு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலை முன்னாள் பேராசிரியரின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

(i) லட்சத்தீவில் மக்கள் வசிக்கும் 10 தீவுகளில் அகத்தி தீவும் ஒன்றாகும். இத்தீவு பவளப் பாறைகளைக் கொண்டதாக இருப்பதுடன், பல்வேறு கடல் உயிரினங்களுக்கு பாதுகாப்பு அரணாக உள்ளது.

(ii) இத்தீவின் பவளப் பாறை சூழலிலிருந்து சுமார் 3 மி.மீ.அளவுள்ள புதிய வகை நண்டு இனத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். இந்த சிறிய நண்டு 'கலாத்தியா' என்ற இனத்தைச் சார்ந்தது. இவ்வினத்தைச் சேர்ந்த நண்டுகள் 'ஸ்குவாட் லாப்ஸ்டர் எனப் பொதுவாக அழைக்கப்படுகின்றன.

(iii) இந்த புதிய இனத்துக்கு, கடல் உயிரியல் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை வழங்கிய அண்ணாமலைப்ப கடல் அறிவியல் துறை முன்னாள் இயக்குநரும், புல முதல்வருமான த.பாலசுப்ரமணியனை கௌரவிக்கும் விதமாக, 'கலாத்தியா பாலசுப்பிரமணி என பெயரிடப்பட்டுள்ளது.

(iv) இந்த முயற்சி, இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் செயல்படும் தேசிய மீன் மரபணு வள பேணகம் நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. அந்நிறுவனத்தின் மண்டலத் தலைவர்

தி.த.அஜித்குமார் வழிகாட்டுதலில், ஆராய்ச்சி மாணவர் சுரேந்திரன் மேற்கொண்டார்.

(v) இது குறித்து தி.த.அஜீத்குமார் கூறுகையில், 'இந்த நண்டின் உடல் அமைப்புகளை ஆராய்ந்ததுடன், இந்திய - பசிபிக் பகுதியில் அதன் நெருங்கிய தொடர்புடைய இனங்களுடன் ஒப்பிட்டு, டி.என்.ஏ. பகுப்பாய்வின் மூலம் இந்த புதிய இனத்தை உறுதிப்படுத்தினர். இந்த ஆய்வு முடிவுகள் சர்வதேச விஞ்ஞானிகளால் அங்கீகரிக்கப்பட்டு, உலக உலகளாவிய உயிரின வகைப்பாடு இதழான 'ஜூடாக்சா'வில் வெளியிடப்பட்டுள்ளது.

(vi) புதிதாக கண்டறியப்பட்ட இந்த நண்டு, லக்னோவில் உள்ள தேசிய மீன் மரபணு வள பேணகத்தால் பராமரிக்கப்படும் தேசிய நீரியல் உயிரினக் களஞ்சியத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது' என்றார்.

4.ஆஸ்திரேலியாவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக், சிட்னி போண்டி கடற்கரையில் யூத பண்டிகை கொண்டாட்டங்களுக்கு இடையே நடந்த பயங்கரவாதத் தாக்குதலின் நினைவிடத்துக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

(i) கடந்த டிசம்பர் மாதம் 14-ஆம் தேதி, போண்டி கடற்கரையில் யூதர்களின் ஹனுக்கா பண்டிகையைக் கொண்டாட ஏராளமானோர் கூடியிருந்தனர். அப்போது துப்பாக்கியுடன் வந்த தந்தை-மகன், அங்கு கூடியிருந்தவர்கள் மீது திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 15 பேர் கொல்லப்பட்டனர்; சுமார் 40 பேர் காயமடைந்தனர்.

5. சர்ச்சைக்குரிய தேச பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தொடரப்பட்ட வழக்கில், ஹாங்காங்கின் பிரபல ஊடக அதிபரும், ஜனநாயகப் போராட் உங்களின் ஆதரவாளருமான ஜிம்மி லாய்க்கு (78) 20 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(i) பல ஆண்டுகளாக நீடித்த இந்தச் சட்டப் போராட்டத்தில், ஜிம்மி லாய் வெளிநாட்டு அமைப்புகளுடன் சேர்ந்து நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விளைவித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

(ii) சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள ஹாங்காங், உலகின் மிக முக்கியமான நிதி மற்றும் வர்த்தக மையங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியின்கீழ் இருந்த இப்பகுதி, கடந்த 1997- ஆம் ஆண்டு சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

(iii) இந்நிலையில் கடந்த 2019-ஆம் ஆண்டு, ஹாங்காங்கின் தன்னாட்சி அதிகாரத்தில் சீனா தலையிடுவதாகக் கூறி பெரிய அளவில் போராட்டங்கள் வெடித்தன. இதைத் தொடர்ந்து, சீனா கொண்டு வந்த புதிய தேச பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் ஜிம்மி லாய் கைது செய்யப்பட்டார்.

(iv) தற்போது நிறுத்தப்பட்டுவிட்ட ஆப்பிள் டெய்லி என்ற நாளிதழின் உரிமையானரான இவர், தனது பத்திரிகை மூலம் அரசுக்கு எதிரான கருத்துகளைப் பரப்பியதுடன் வெளிநாடுகளுடன் சேர்ந்து சதிசெய்ததாக மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது.

(v) ஜிம்மி லாய் ஏற்கெனவே சில வழக்குகளுக்காகச் சிறையில் உள்ளார். அவரது வயது மற்றும் உடல்நிலையைக் கருத்தில் கொண்டு தண்டனையைக் குறைக்க வேண்டும் என அவரின் வழக்குரைஞர்கள் வாதிட்டனர். ஆனால் 'சதித் திட்டங்களுக்குத் தலைமை தாங்கியவருக்கு முறையான தண்டனை வழங்குவதே சட்டத்தின் கடமை என்று கூறி நீதிமன்றம் அந்தக் கோரிக்கையை நிராகரித்தது.

6. தாய்லாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பிரதமர் அநுதின் சான்விராகுல் தலைமையிலான பூம்ஜெய்தாய் கட்சி 193 இடங்களைக் கைப்பற்றியுள்ளது.

(i) எனினும், ஆட்சி அமைக்கதேவையான 251 இடங்கள் கிடைக்காததால், கூட்டணிப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க அக்கட்சி ஆயத்தமாகி வருகிறது.

(ii) தாய்லாந்து நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையின் மொத்தம் 500 இடங்களுக்கு இத்தேர்தல் நடைபெற்றது.

(iii) பூம்ஜெய்தாய் கட்சி அதிக இடங்களை வென்ற நிலையில், சீர்திருத்த கொள்கைகளுடன் களமிறங்கிய மக்கள் கட்சி, 118 இடங்களுடன் 2-ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டது.

(iv) செல்வாக்கு மிக்க ஷினவத்ரா குடும்பத்தின் பியூ தாய் கட்சி 74 இடங்களை மட்டுமே பெற்றது. மற்ற சிறிய கட்சிகள் இணைந்து சுமார் 115 இடங்களைப் பிடித்துள்ளன.

(v) தேர்தலுக்கு முந்தைய கருத்துக் கணிப்புகளில் இளைஞர்களின் ஆதரவு பெற்ற மக்கள் கட்சி முன்னிலையில் இருந்தது. ஆனால், கம்போடியா நாட்டுடனான எல்லைப் போர் மற்றும் மோதல்கள் என நெருக்கடியான சூழலில் நாட்டின் பாதுகாப்புக்கு வலுவான தலைமை அவசியம் என்று மக்கள் கருதியதே, ஆளுங்கட்சியின் வெற்றிக்குக் காரணம் என அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

(vi) புதிய அரசமைப்புச் சட்டம்

- நாடாளுமன்றத் தேர்தலுடன் சேர்த்து, 2014 ராணுவப் புரட்சிக்குப் பிறகு உருவாக்கப்பட்ட நாட்டின் தற்போதைய அரசமைப்புச் சட்டத்தை மாற்றுவது குறித்த பொது வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது.
- இதில் சுமார் மூன்றில் இரண்டு பங்கு வாக்காளர்கள், தற்போதைய சட்டத்தை மாற்ற ஆதரவு தெரிவித்தனர். இதன் மூலம், புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பணிகள் விரைவில் தொடங்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

7. இந்தியாவில் நடைபெறும் சையது மோடி இன்டர்நேஷனல் பாட்மின்டன் போட்டிக்கான அந்தஸ்து 'சூப்பர் 300'-இல் இருந்து 'சூப்பர் 100'-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

8.செஷல்ஸ் நாட்டுக்கு ரூ.1,587 கோடி (175 மில்லியன் டாலர்) மேம்பாட்டு நிதி வழங்குவதாக இந்தியா அறிவித்தது.

(i) 6 நாள் சுற்றுப்பயணமாக இந்தியா வந்துள்ள செஷல்ஸ் அதிபர் பேட்ரிக் ஹெர்மினியுடன் பிரதமர் நரேந்திர மோடி ஆலோசனை நடத்திய பிறகு இந்த அறிவிப்பு வெளியானது.

(ii) பிரதமர் இதுதொடர்பாக நரேந்திர மோடி வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'இந்தியா- செஷல்ஸ் இடையேயான நட்புறவு புவியியல் ரீதியானது மட்டுமல்ல; வரலாற்று ரீதியாகவும், நம்பிக்கை மற்றும் எதிர்காலத்துக்கான தொலைநோக்குத் திட்டத்தையும் கொண்டது. இருதரப்பு உறவில் மேம்பாட்டு ஒத்துழைப்பு வலுவான அடித்தளமாக விளங்குகிறது.

(iii) செஷல்ஸ் வளர்ச்சி மற்றும் தேவைகளை இந்தியா எப்போதும் கவனத்தில் கொண்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக தற்போது செஷல்ஸ் மேம்பாட்டு நிதியாக ரூ.1,587 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

(iv) சமூக குடியிருப்பு, போக்குவரத்து, திறன் சார்ந்த பயிற்சி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் கடல் சார் பாதுகாப்பு எனப் பல்வேறு துறைகளுக்கு இந்த நிதி உதவிகரமாக இருக்கும்.

9. புதிய வரைவு வருமான வரி விதிமுறைகளின்படி, ரொக்கத்தை டெபாசிட் செய்தல், திரும்ப எடுத்தல், மோட்டார் வாகனங்கள், சொத்து வாங்குதல் உள்ளிட்டவற்றுக்கு பான் எண்ணைக் குறிப்பிடுவதற்கான வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

(i) 1961-ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்துக்கு மாற்றாக புதிய வருமான வரிச் சட்டம்-2025 வரும் ஏப்.1 முதல் அமல்படுத்தப்பட உள்ளது.

(ii) இந்தப் புதிய சட்டத்தின் கீழ், எளிமைப்படுத்தப்பட்ட

வருமான வரி விதிமுறைகள் மற்றும் வருமான வரிப் படிவங்கள் குறித்து பொதுமக்களிடம் மத்திய அரசு கருத்து கோரியுள்ளது. அந்த வரைவு விதிமுறைகள் மற்றும் படிவங்கள் குறித்த இறுதி அறிவிக்கையை வெளியிடும் முன், அந்தக் கருத்துகள் பரிசீலனை செய்யப்படும் என்று மத்திய நேரடி வரிகள் வாரியம் தெரிவித்துள்ளது.

(iii) இந்நிலையில், வரைவு வருமான வரி விதிமுறைகளின்படி, ஒரு நிதியாண்டில் ஒன்று அல்லது அதற்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகளில் மொத்தம் ரூ.10 லட்சம் அல்லது அதற்கும் அதிகமான ரொக்கத்தை டெபாசிட் செய்யவோ அல்லது திரும்ப எடுக்கவோ ஒருவர் விரும்பினால், அதற்கு அவர் தனது பான் எண்ணைக் குறிப்பிடுவது கட்டாயம். தற்போது வங்கி அல்லது கூட்டுறவு வங்கிக் கணக்கில், ஒரு நாளில் ரூ.50,000-க்கும் அதிகமான ரொக்கத்தை டெபாசிட் செய்ய பான் எண்ணை சமர்ப்பித்து கட்டாயம்.

(iv) புதிய வரைவு விதிமுறைகளின்படி, ரூ.5 லட்சத்துக்கும் அதிகமான விலை கொண்ட மோட்டார் வாகனங்களை (மோட்டார் சைக்கிள்கள் உள்பட) வாங்குபவர், தனது பான் எண்ணைக் குறிப்பிட வேண்டும். இப்போது உள்ள விதிமுறைகளின்படி இருசக்கர வாகனங்கள் வாங்கும்போது பான் எண்ணைத் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால், பிற மோட்டார் வாகனங்கள் வாங்கும்போது பான் எண்ணைத் தெரிவிக்க வேண்டியது கட்டாயமாக உள்ளது.

(v) புதிய வரைவு விதிமுறைகளின்படி, திருமணம், கண்காட்சி உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெறும் மண்டபங்கள் அல்லது விருந்து மண்டபங்களில் ஹோட்டல் மற்றும் உணவக கட்டணங்கள் ரூ.1 லட்சத்தை தாண்டினால் பான் எண்ணை சமர்ப்பிப்பது கட்டாயம். தற்போதுள்ள விதிமுறைகளின்படி இந்தக் கட்டணங்கள் ரூ.50,000-ஐ தாண்டினால் பான் எண்ணை சமர்ப்பிக்க வேண்டும்.

(vi) புதிய வரைவு விதிமுறைகளின்படி, எந்தவொரு அசையா சொத்தை வாங்கும்போது, விற்பனை செய்யும்போது, பரிசளிக்கும்போது அல்லது அந்தச் சொத்து தொடர்பாக கூட்டு மேம்பாட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ளும்போது அதற்கான மொத்த செலவு ரூ.20 லட்சத்துக்கும் அதிகமாக இருந்தால், பான் எண்ணை கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். தற்போது இந்தச் செலவு ரூ.10 லட்சமாக இருந்தால் பான் எண்ணை குறிப்பிட வேண்டும் என்று உள்ள நிலையில், அந்த வரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது